**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4130

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 11.08.2021

Accepted: 21.09.2021

Published: 01.10.2021

Citation:
Dhinakar, R., and T. Subasree. "Tamilarin Naattu Maruthuva Varalaaru (History of Indigenous Tamils Medicinal System)." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 2, 2021, pp. 110–19.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4130

*Corresponding Author:
ierathinakar@rediffmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# History of Indigenous Tamils Medicinal System

**R. Dhinakar M.A., PGDM.,**
*M.A. History, Pondicherry University, Pondicherry, India*
http://orcid.org/0000-0001-6657-5489

**T. Subasree, M.A., M.Phil.,**
*Research Scholar, St. Joseph's College of Arts and Science*
*Cuddalore, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0003-2403-5577

**Abstract** - Tamils have their indigenous system of Traditional medicine (Siddha medicinal system) which developed through ages, from the dream time in the past and still evolving. This system of medicine did not evolve in a single day, it took a prolonged period, through vast experience gathered through observation of the human body, and its symptoms towards diseases and examination of thousands of herbs, metals, and minerals to cure the diseases. This skill and wisdom have been passed over generations which made this system one of the most efficient medicinal systems of our time. But over time this Tamil system of medicine was suppressed and underestimated in the name of modern science, the biased-prejudiced propaganda and hatred spread by huge pharma groups against this system, to prove that this system of medicine is irrational and unscientific which not true. Same time the lack of support from the government side in the previous years to enhance this Tamil Siddha medicinal system, made the scenario favor western medicinal pharma groups. However, the scenarios are been changing with the wakening of Tamils' political and historical consciousness. It is for sure that soon Tamil's traditional system of Medicine will retrieve and rise with its unique philosophy and virtue.

**Keywords:** Tamils Traditional medicine – Siddha Medicine – indigenous medicine – history of Tamil Medicinal system – Ancient literary pieces of evidence on Medicine – Philosophy of ancient Tamils medicinal system.

**References**

1. Kalanidhi E. Balasundaram, IlakkiyathilMaruthuvakaruthukkal (Medical Thoughts in Tamil Text), Folklore Society, Jaffna, 1990, p-1.
2. Silappathigaram, lines-443 -444.
3. Tholkappiyam, verse -1447.
4. Silappathigaram, Nadukankadhai, lines 182-183.
5. https://www.tamilheritage.org/manulogy/siddha/siddha.html.
6. Thirukural, verse – 734.
7. Thirukural, verse – 738.
8. Thirukural, verse – 941.
9. Kalanidhi E. Balasundaram, IlakkiyathilMaruthuvakaruthukkal (Medical Thoughts in Tamil Text), Folklore Society, Jaffna, 1990, p-4.
10. Thirukural, verse – 948.
11. Thirukural, verse – 949.
12. Thirukural, verse – 800.
13. Pathittrupaththu, verse -42, lines 2-4.
14. Purananooru, verse 353, lines 15-16.

15. KulasekaraAalvaar, PerumaalThirumoli, verse-4, lines 1-2.
16. Thirukural, verse – 950.
17. Nattrinai, verse – 136, lines 2-3.
18. Kalithogai, verse – 139, lines 2-3.
19. Kalithogai, verse – 129, lines 24-25.
20. Purananooru, verse – 34, lines 2-7.

# தமிழரின் நாட்டு மருத்துவ வரலாறு

**இர. தினகர்**
முதுகலை வரலாறு
புதுவைப் பல்கலைகழகம், புதுவை, இந்தியா

**த. சுபஸ்ரீ**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தூயவளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடலூர், தமிழ் நாடு, இந்தியா

***ஆய்வுச் சுருக்கம்***
*பன்நெடுங்காலமாக தொல் தமிழர்கள் பல தலைமுறைகளாக பெற்ற பட்டறிவாலும் பகுத்தாயும் அறிவாலும் வளர்த்தெடுத்த மரபு வழிப்பட்ட நாட்டு மருத்துவம் இன்று மேற்கத்திய பன்னாட்டு மருத்துவ நிறுவனங்களினால் உந்தப்பட்ட ஒரு தலை சார்பான ஆய்வுகளால் முறைப்படி பகுப்பாய்வுஅடிப்படை இல்லாத மருத்துவ முறையாக காட்டப்பட்டு பெரும் இருட்டடிப்புக்கு உள்ளானது, அரசாலும் முறையான ஊக்கமும் உதவியும் இல்லாமல் முடங்கியது. ஆனால் உண்மையில் தமிழரின் மருத்துவம் சிறப்பான தத்துவமும் மெய்யியல் கோட்பாட்டையும் வரலாற்றையும் கொண்டுள்ளது. அது வெளிவரும் காலம் உறுதியாக தமிழர் மருத்துவம் பெரும்ஆற்றல் கொண்டது என உலகிற்கு புலப்படும்.*

***முதன்மைச்சொற்கள்:*** *தமிழர் மருத்துவம், சித்த மருத்துவம், நாட்டு மருத்துவம், மருத்துவ வரலாறு, மருத்துவ குறிப்புகள், தமிழர் மருத்துவக் கோட்பாடு.*

காலவோட்டத்தில் நிகழ்வனவற்றையும், வருவனவற்றையும் அப்படியே எவ்வித எதிர்வினையும் இன்றி மாந்த இனமட்டும் மல்ல, எந்த ஒரு உயிரினமும் அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. சிந்தைக்கும், உயிருக்கும், மெய்யிக்கும் இன்பம் தருவதென்றால் அவற்றை தக்கவைத்து கொள்ளவும், துன்பம் தருவனவென்றால் அவற்றை நீக்கி இயல்பை அடையவும் உடலில் உள்ள உயிரானது எதிர்வினைகளை மேற்கொள்ளும். அவ்வாறே உடலின் இயல்பைக்கெடுத்து உயிருக்கும், சிந்தையாகிய மனதிற்குத் துன்பம் தரும் நோயானது ஊறு வினைசெய்யும் போதேல்லாம் அதை நீக்கி உடலின் இயல்பை அடைவதற்கான எதிர்வினையை உடல் மேற்கொள்ளும், அவ்வாறு முயன்றும் நோய் அல்லது குறைபாடுகள் நீங்காதபோது இவ்வற்றை சீர் செய்யும் தன்மை கொண்ட சிலவற்றை மருந்தாக எடுக்கவேண்டிய சூழல் உருவாகிறது, இப்படி பல்வேறு நோய்கள் குறைபாடுகள் அதன் தன்மை, தோற்றுவாய், ஆகியவற்றை சீர்செய்யும் மருந்து மற்றும் அதன் பயன்பாடு பற்றிய அறிவே மருத்துவம்.

இப்பண்பு மாந்த கூட்டத்திற்கு மட்டும் உரித்தானதல்ல விலங்கு முதலிய அனைத்து உயிர்களுக்கும் உரித்தானதே, இதையே விலங்குகளும் தம்பிணி போக்க இயற்கை மூலிகைகளை நாடுதல் இயல்பே என்பார் கலாநிதி இ. பாலசுந்தரம். எடுத்துக்காட்டாக

நம்மோடு இருக்கும் நாய் மற்றும் பூனையை சற்று நோக்குங்கள் அவை உண்ட உணவு செரிமானம்ஆகவில்லை என்றால் உடனே தேடிச் சென்று புல்லை கடித்துண்டு வாந்தி எடுக்கும். மேச்சலுக்கு செல்லும் ஆடுமாடுகள் நஞ்சுள்ள செடிகொடிகளை ஒரு நாளும் உண்ணாது. அவ்விலங்கிற்கெல்லாம் நாம் தான் அம்மருத்துவத்தையும், நஞ்சு எது நல்லது எது என்று பாடம் சொன்னோமா? இல்லையே. அவையெல்லாம் இயற்கையாகவே பரிணாமத்தினால் ஏற்பட்ட பட்டறிவினால் வந்த அறிவே.

மருத்துவம் என்பது ஒரேநாளில் திடீரென்று மாந்தமூளையில் தோன்றிய ஒன்று அல்ல, விலங்காக இருந்து காலம் முதல் விலங்கிலிருந்து திரிந்த மாந்தன் விலங்காண்டியாக வாழத் தலைப்பட்டு பின் பண்பட்டு, குடிகளும் குலங்களாகவும் கூடி நிலையாக ஊர், நகரம் என அமைத்து நாகரிகம் சமைத்த காலம் எனத் தொடர்ந்து வளர்ந்து வந்தபட்டறிவின் வழித் தோன்றியதே. உலகில் உள்ள அனைத்து பழங்குடிகளிடமும் அக்குடிகளின் வாழ்விடம், புவியியல் அமைப்பு, இயற்கை வளம் மற்றும் மரபுக்கு ஏற்றவாறு தனக்கே உரித்தான தனித்துவமான மருத்துவம் முறையினைக் கொண்டிருப்பர்.

இவ்வாறு வளர்ந்த மருத்துவ அறிவு இன்றுள்ளது போல அன்றே தனித்துறையாக தனித்து வளர்ந்த ஒன்று அல்ல. அதுசமயம், தத்துவம், வானியல் என பல்வேறுபட்ட அறிவுத்துறையோடு சேர்ந்தே வளர்ந்தது. பழங்குடிகளிடம் (primitive people) நோயை தமக்கு அப்பார்ப்பட்ட ஆற்றல்களான (Supernatural Powers) தீயஆவிகளும், பேய்களும் தான் ஏற்படுத்துவதாக அவர்கள் நம்பினர் எனவே மந்திரங்களைச் சொல்லும், பூசையும் வழிபாடுகளையும் செய்யும் மறையர்களும், ஊர் பூசாரிகளும் அவர்களின் மருத்துவர்களாக இருப்பது இயல்பே. இன்றளவும் பழங்குடிகளுக்கு பூசாரி (shaman) தான் மருத்துவம் அளிப்பர். இன்றளவும் தமிழர்களிடம் கூட குழந்தைக்கோ, பெரியவர்களுக்கோ பயத்தால் அரண்டதன் காரணமாக வரும் சுரத்திற்கு ஊர்ப் பூசாரியைக் கொண்டு வேம்புஆணி முதலிய சிறு இரும்புகருவிகளைக் கொண்டு பாடம் அடிக்கும்மரபு உள்ளது.

இவ்வாறுதான் தமிழரும் தனக்கென உரித்தான தனி மருத்துவமுறையை கொண்டுள்ளனர். ஆனால் தமிழர்களிடம் பிற பழங்குடிகளிடம் உள்ளது போன்ற வெறும் பட்டறிவு மருத்துவமாக மட்டுமல்லாமல் பண்டைய தமிழ் வள்ளுவக் கணியர்களும் பார்ப்பார்களும் பெற்றெடுத்த ஒரு சிறந்த தத்துவ மற்றும் அறிவியல் முறைமைகளையும் கொண்ட மருத்துவ முறையாக இருந்தது. அத்தமிழர் மருத்துவம் இன்று சித்த மருத்துவம் என்று அழைக்கப்படுகிறது. இந்த துணைக் கண்டத்தில் உள்ள ஆயுர்வேதம், யோகம் முதலிய மருத்துவ முறைக்கெல்லாம் தாய் மருத்துவம் தமிழர் வளர்த்தெடுத்த மருத்துவமே. ஆயுள்வேதமே சங்கத்தில் ஆயுர்வேதமாகியுள்ளது. இதற்குச் சான்றாக சிலப்பதிகாரத்தின் வரிகள் உள்ளன. அதுவே

**"வீழ்குடி உழவரோடு விளங்கிய கொள்கை**
**ஆயுள்வேதரும் காலக்கணிகரும்".**

இன்று தமிழர் மருத்துவமான சித்த மருத்துவம் மாற்று மருத்துவமென்ற பெயரெடுத்து நிற்பதும், மேற்கத்திய ஆங்கில மருத்துவம் மட்டும்தான் அறிவியல் மருத்துவம் என்று வழங்குவதும் சிந்தைக்கு ஒவ்வாத ஒன்று.

மேற்கத்திய ஆங்கில (Allopathy) மருத்துவம் மட்டும்தான் பகுப்பாய்வு முறைப்படியானது பிற மரபுவழி மருத்துவங்கள் எல்லாம் பகுப்பாய்வு முறைபடியான தென்றும் ஆய்வு அடிப்படை இல்லாதது என்றும் போலியான ஒரு தலைசார்பான கருத்துகளை மக்களின்

மனதில் வலிய திணிக்க பல வழிகளில் முயல்கின்றனர். இவ்வற்றை ஆய்வது இக்கடுரையின் நோக்கமன்று. ஆயினும், நெடுங்காலமாக இம்மண்ணின் மருத்துவத்தை முறைகளை ஆராயவும், புதிய பகுப்பாய்வு கருவிகள்கொண்டு அவற்றின் செயல் திறனையும், வீரியத்தையும் ஆய்ந்து ஆவணப்படுத்த எந்த ஊக்கமும் உதவியும் அளிக்கமல் வன்மம் கொண்டு அவற்றை முடக்கிவிட்டு இன்று அதில் போதிய ஆய்வுகள் இல்லை என்றும் ஆவணங்கள் எங்கே என்றெல்லாம் கேட்பது அறிவின்மையின் உச்சம். மேற்கத்திய ஆங்கில மருத்துவத்தில் ஒரு நோய்க்கு தொடர்ந்து மருந்து எடுத்தால் பக்கவிளைவாக மற்றொரு நோயை ஏற்படுத்தும் தன்மை உள்ளதே அதைப்பற்றி மட்டும் இன்றைய ஆய்வுகள் மௌனம் காப்பது ஏன்? இப்போக்கு அறிவுக்கும் நல்வாழ்வுக்கும் ஒவ்வாத போக்கே. தமிழர் மருத்துவத்தின் தத்துவமும் தன்மையும் வரலாறும் வெளிவரும் காலம் இனிவரும்.

## தமிழர் மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழர் மருந்துவமாம் சித்த மருத்துவத்தின் வரலாற்றைப் பற்றி இந்திய வரலாற்று அறிஞர்களிடம் ஒரு ஏளனமானப் பார்வையும், குறுகிய நோக்கும் இருப்பது வெளிப்படைய தெரிகிறது. சித்த மருத்துவம் ஆயுர்வேதம் என்னும் வடநாட்டு வேத பண்பாட்டு மருத்துவத்தைத் தழுவி உருவாப்பட்டது என்றும் கூறி வந்தனர்.

## அதற்கு இவர்கள் கூறும் மூன்று தலையாயக் காரணங்கள்

1. சித்தர் என்னும் சொல்லே சங்கதம் என்றும் அது கழக இலக்கியங்களில் எங்கேயும் காணப்படாமை.
2. கழக இலக்கியங்களில் சித்தர்களின் தன்மையை பற்றி வெள்ளிவீதியார் இயற்றிய ஒரே ஒரு பாடல் தான் உள்ளது.
3. சித்தர் இலக்கியங்கள் எல்லாம் கிபி 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின் இயற்றப் பெற்றவையாக உள்ளமை.
4. சித்த மருத்துவம் சைவ சித்தாந்தத்தை தழுவியது, சைவமோ கிருத்து ஊழிக்கு பின்னால் உருவானது. ஆதலால் சித்த மருத்துவமும் அதற்குப் பிந்தியதே.

இவையெல்லாம் கழக இலக்கியத்தின் ஆழத்தையும், சித்த மருத்துவத்தின் தன்மையையும் புரியாமல் ஆய்ந்ததின் விளைவே. கிமு1500திற்கு முற்பட்ட பண்டைய தமிழிலக்கண நூலான தொல்காப்பியத்திலேயே "மருத்துவ அறிஞர்" என்று வருகிறது. அதுவே

**ஊரும், அயலும், சேரியோரும்**
**நோய் மருத்து அறிந(ஞ)ரும்.**

பின்னர் கழக காலத்தில் மருத்துவன் தாமோதரனார் என்ற மருத்துவர் ஒருவர் புலவராய் இருந்தாரே அவரென்ன ஆங்கில மருத்துவரா? தமிழ் மருத்துவர் தானே. ஆம் சித்தர் என்ற சொல் கழக இலக்கியங்களில் கிடையாது, தமிழிலக்கிய வரலாற்றில் முதன்முதலில் சித்தர் என்ற சொல் சிலப்பதிகாரத்தில் தான் வருகிறது.

**தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்**
**சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி**

சிலம்பின் காலம் கிபி இரண்டாம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கூறுவர். 1927க்கு முன் சித்த மருத்துவம் என்னும் பெயர் வழங்கப்படவில்லை. மருத்துவம் என்றே வழங்கப்பட்டு வந்துள்ளது ஆகவே, சித்த மருத்துவம் என்னும் பெயரை "தமிழ் மருத்துவம்" என்று வழங்க அரசாணை வெளியிடவேண்டும் என்பதை "தமிழ் மருத்துவமும் தமிழ் மருத்துவ சுவடிகளும்" என்னும் கட்டுரையில் முனைவர் இர.வாசுதேவன் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

மருத்துவத்தை சங்கதப்படுத்தி வைத்தியம்

என்றும் கூறும் வழக்கமும் இங்கே இருந்து வந்துள்ளது. கல்வெட்டுகளில் வைத்திய சாலை என்ற சொல் பல இடங்களில் வருவது இதனைக் காட்டும். ஆயினும் சித்த மருத்துவமென்னும் பெயர் வரக் காரணம் என்ன என்ற கேள்வி எழுவது இயல்பே.

பண்டைய காலம் தொட்டு தமிழ்க் குடி மருத்துவ அறிஞர்களால் இம்மருத்துவ மரபு வளர்ந்தெடுக்கப்பட்டு வந்தது, கிருத்து ஊழிக்கு பின் அயலார் படையெடுப்பாலும், தமிழர் பண்பாடு மற்றும் வாழ்வியல் கட்டுமானங்களில் நிகழ்ந்த தாக்குதல்களாலும் இக்குடிகள் சிதைத்து வீழ்த்தப்பட்டது. அயலார் தலையெடுத்த பின் இம்மருத்துவ முறைகள் எல்லாம் சங்கதமாக்கபட்டிருக்க வேண்டும். அவ்வாறு ஆக்கப்பட்டப் பின் மூலத்தமிழ் மருத்துவ நூட்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். பின் அதிலிருந்து மெல்ல தமிழர்களை ஒதுக்கியிருக்க வேண்டும். இவ்வாறான காலக்கட்டத்தில் இம்மருத்துவத்தைக் காக்கும் பொருட்டு பழந்தமிழர் சமயமரபுகளின் வேரில் கிளைந்த சைவத்தைத் தழுவி பின்னர் திருமூலர் போன்ற சைவசித்தர்களால் தத்துவ புதுநெறியூட்டப் பெற்று கிபி 5ஆம் நூற்றாண்டு வாக்கில் ஆசிரியர் மாணவர் முறையில் வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படி தான் சித்தர் மரபுக்குள் தமிழர் மருத்துவம் சென்றது என்பது என்துணிபு.

இந்தப் போக்கு புதியதல்ல அன்றும் இம்மருத்துவத்தை வளர்த்த பெருபாலானோர் ஆசிவக, சமணம் போன்ற சமயங்களை சார்ந்த கடுந்துறவு பூண்ட துறவிகள் தான். அதே துறவு மரபை ஒத்தது தான் இந்த சித்த மரபும்.

தமிழர் கண்ட மருத்துவத்தின் வேர் என்பது வரலாற்றுக்குப் புலப்படாத பூர்வீக பழங் குடிகளின் மிகத் தொன்மையான கனவு காலமளவிற்கு(Dreamtime) ஆழம் கொண்டது. அவ்வாறு அனுபவப் பட்டறிவின் வழி வளர்ந்த தமிழர் மருத்துவம் பண்டைய நாகரிகங்கள் தழைத்து வளர்ந்த காலக்கட்டத்தில் தமிழ் குடியில் பிறந்த அறிவுத் துறவிகளால் மேலும் நெறிமுறை செய்யப்பட்டு, நுண்ணிய அறிவினால் அறியப்பட்ட செய்முறைகளையும் மற்றும் தத்துவங்களையும் கொண்ட தனித்துவமான ஒரு மருத்துவ முறையினை பெற்றெடுத்தனர். அத்துறவிகள் மருத்துவத்தை மட்டும் வளர்தெடுக்கவில்லை அதனுடன் வானியல், மெய்யியல், பொருட்களின் இயல்பு, ஆற்றல், அணுக்கொள்கை என பலவற்றை ஆய்ந்து கண்டறிந்தனர், மேற்கே கிரேக்கர்களிடம் தோன்றியதாக கூறப்படும் அணு பற்றிய ஆதி அறிவிற்கும் ஆணிவேர் தமிழகத்தில் இருந்த கணியர், பார்ப்பார்களின் அறிவுப் பள்ளிகளில்தான் என்று அறிஞர் குணா தன் ஆய்வின் வழி ஆணித்தரமாக நிறுவுகிறார்.

**மருத்துவத்தின் முக்கியதுவம் அறிந்த தமிழர்**

சித்த மருத்துவம் என்றதும் சித்தர்கள் பற்றிய குறிப்பைக் கழக இலக்கியத்தில் தேடியவர்கள், சித்தர்களின் அட்டமாசித்திகள் பற்றிய குறிப்புகள் தான் கழகக் காலத்தில் சித்தர்களின் இருப்பைக் காட்டுவதாக அமையும் என்று நம்பிய தன்வினை தான் கழக இலக்கியங்களில் சித்த மருத்துவம் பற்றிக் குறிப்பில்லை என்றும், சித்தர்கள் பற்றிக் குறிப்பு வெள்ளிவீதியார் இயற்றிய ஒரே ஒரு பாடல் தான் என்ற முடிவிற்கு வரக் காரணம். ஆனால் தமிழரிடம் இருந்த மருத்துவம் பற்றியும் நோய் குறித்தான அறிவுப்பற்றியும் பல சான்றுகள் கழக இலக்கியத்தில் குவிந்து கிடக்கின்றது.

> ***“ஊறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேராது இயல்வது நாடு”***

நாடு என்று ஒன்று அரசு ஆட்சியியல் கூறுகள் பெற்று நிற்பதை தாண்டி அதில் வாழும் குடிகளுக்கு உணவில்லாத நிலையால் ஏற்படும் ஊறுதரும் பசியும், பரவும் கொல்லை நோயும், சூழும்பகையும் சேரமல் தடுத்து நிற்பதே நாடு என்பது வள்ளுவன் தமிழர்க்கு சொல்லும் மறை.

**“பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென் நாட்டிற்கு இவ்வைந்தும்”**

அதே போல் ஒரு நாட்டிற்கு அணியாவது அந்நாட்டில் வாழும் குடிகளுக்கு நோயில்லாமலும், பொருட்செல்வமும், நல்ல விளைச்சலும், குடிகளுக்கான காவல் ஆகிய நான்கும்தான் என்கிறார். இதில் நாம் பார்க்க வேண்டியது ஒரு நாட்டிற்கு இன்றியமையாத ஒன்று அந்நாட்டின் குடிகள் நோய்யில்லாமல் வாழும் நிலையை ஏற்படுத்துவது என்பதே, எத்தகைய மருத்துவ அறிவும் தொலைநோக்கும் இருந்தால் கிமு 500 (கழக இலக்கிய காலங்களுக்கு முன்) அளவிலே தமிழர் இத்தகைய உயரிய நிலையை அடைந்திருப்பர்.

### நோய் பற்றிய அறிவு

நோய் பற்றிய அறிவில்லாமல் அதற்கு மருந்தளிக்க இயலாதன்றோ, பழந்தமிழ் அறிவர்கள் நோய் பற்றி கொண்டிருந்த அறிவுக்கு எடுத்துகாட்டு நோய் என்னும் சொல் தான்.நோய் என்னும் சொல்லுக்கு வேர் நொய் என்று பாவாணர் காட்டுவார், அரிசியின் குறைந்த வடிவம் நொய் எனப்படும் அதாவது நிலையிலிருந்து குறைதல் நொய் எனப்பட்டது அதுவே பின்னர் நோய் என்னும் உடலின் இயல்பை குறைக்கும் தன்மைக்குச் சொல்லானது, நொய்தல் - நொய்-நோய்.

சுரநோய் என்ற சொல் கூட அப்படித் தான் சுரம் என்றால் வெப்பம் அதிகரித்தல் என்று பொருள், வெப்பமான பாலை நிலத்தை சுரம் என்று தான் கழக இலக்கியங்கள் கூறும். அவ்வாறு உடல் சூட்டு ஏறியதால் ஏற்படும் நோய்சுர நோயாகும். அதுவே சங்கத்தில் ஜோரம் என்றானது.

உடலில் நோய் உண்டாக்கும் காரணமாக நூலோர் (மருத்துவ நூல்கள் அறிந்தவர்கள்) கணித்தவைக் குறித்து அன்று வள்ளுவன் கூறிவை தான் இன்று வரை நம் மருத்துவத்தின் அடிப்படை,

**“மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று”**

அதாவது, ஒருவரின் உடலில் இருக்கும் வளி, அழல், ஐயம் (வாதம், பித்தம், கபம்) என மருத்துவ நூலோர் கண்டறிந்த முக்குற்றங்களில் ஏதேனும் ஒன்று அளவுக்கு அதிகமாக கூடினாலும் அல்லது குறைந்தாலும் உடலில் நோய் உண்டாகும் என்கிறார். உடலில் நோயில்லாமல் இருக்க இம்மூன்றின் சமநிலை இன்றியமையாத ஒன்றாகும். இதனை நாடி பார்க்கும் முறைக்கொண்டே அறிய முடியும். ஆனால் ஆயுள்வேதத்தின் மூல நூலான சரகர்சம் கிதை (charaka Samhita) மற்றும் சுசுருதசம்கிதை (Sushruta) யில் நாடிசாத்திரம் பற்றிய குறிப்பே இல்லை, சித்த மருத்துவத்திடமிருந்தே கடனாக பெற்றுள்ளது.

**“நோய்நாடி நோய் முதல் நாடிஅது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்”**

இவ்வாறு நோய் என்னவென்று சரியாக நோயின் குறிகளை கொண்டு அறிந்த பின் அந்த நோயின் காரணம் அறிந்து அதை தீர்க்கும் வழி அறிந்து அதற்கான மருந்துகொடுக்க வேண்டும் என்று வள்ளுவன் நோய் பற்றிய அறிவின் முக்கியத்துவத்தை உரைக்கிறார். மேலும்,

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.**

மருத்துவம் கற்றவனின் மருத்துவ முறையானது நோய் உற்றவரின் அளவையும் (வயது, உடலின் அளவாகிய உயரம் எடை), அவ்வுற்றவரின் நோயின் தாக்கத்தின் அளவும், அந்நோய்க்கு மருந்துதர வேண்டிய காலத்தையும் கருதிதான் இருக்கவேண்டும் என தெளிவாக விளக்குகிறார். பல்வேறு உடல் நோய்கள், உள நோய்கள் பற்றிய குறிப்புகள் கழக இலக்கியத்தில் வருகின்றன, அவற்றை இடம்கருதி இங்கே கொடுக்கப்படவில்லை.

## தமிழர் கண்ட மருந்து

மருந்து எனத் தனி அதிகாரம் தந்த வள்ளுவன் அதில் உள்ள பத்து குறட்பாவில் நான்கு குறள்களில் மட்டும் தான் மருந்து, மருத்துவம், மருத்துவர் பற்றிய தன்மையை கூறியுள்ளார். வியப்பாக மீதமுள்ள ஆறுகுறள்களில் (942, 943, 944, 945, 946, 947) மருந்து என்ற ஒன்றே வேண்டாம். முறைப்படி அளவாக உணவு உட்கொண்டால் என்ற தெளிவாக, நோய்வாரமல் வாழ்வதற்கான வாழ்வியலை விளக்கியுள்ளார். ஒவ்வொரு அதிகாரத்தைப் பார்க்கும் போதும் வள்ளுவர் அந்தத் துறையின் வல்லவராகத் தான் இருப்பார் என்று எண்ணத் தோன்றும், அப்படிதான் இங்கேயும் இவ்வதிகாரத்தைப் பார்க்கும் போது மருத்துவ அறிவு முழுவதும் பெற்றவர் வள்ளுவர் என்றும் உணர்த்துகிறது.

தொல்காப்பியம் தொடங்கி கழக இலக்கியங்களிலும் அதற்குப் பிந்தைய கீழ்க்கணக்கு நூட்களிலும் பல்வேறு மருந்து மற்றும் மூலிகை பற்றியக் குறிப்புகள் விரவிக்கிடக்கின்றனர் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், நான்மணிகடிகை முதலிய நூல்களின் பெயர்களேஅதற்கு சான்றுதரும். மருந்தின் தன்மை பற்றி இதுவரை உலகில் உள்ள விளக்கங்களுக்கெல்லாம் தலை திருமூலரின் விளக்கம் ஆகும். மருந்தானது உடலில் உள்ள நோயை நீக்குவது, நோய் தாக்கத்தால் ஏற்பட்ட மனநோய் (உளநோய்) போக்குவது. மருந்தானது எதிர்காலத்தில் நோய் வராமல் தடுப்பது. மருந்தானது சாவு வராமல் தடுப்பதாக இருக்க வேண்டும் என்பதே அவ்விளக்கம்.

> **“மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்**
> **மறுப்பது உளநோய் மருந்தெனச்சாலும்**
> **மறுப்பது இனிநோய் வாராதிருக்க**
> **மறுப்பது சாவையும் மருந்தெனலாமே”**

இத்தகைய தெளிந்தததத்துவப்புரிதல் கொண்ட ஓர் இனத்தின் மருத்துவ அறிவும் வரலாறும் எப்படி வரலாற்றின் பக்கங்களிலிருந்தும், மக்களின் மரபுகளிலிருந்தும் காணமல் போனது என்பது மர்மம்ங்களுக்கெல்லாம் மர்மம்மாகவே எஞ்சி நிற்கிறது.

## அறுவை மருத்துவம்

மருந்தைப் பற்றியும் நோயைப் பற்றியும் இத்தகைய புரிதல் உள்ளதோர் மருத்துவ முறையைக் கொண்ட குடிக்கு அம்மருந்தினை மிகவும் இக்கட்டான நோய்க்கும், சூழ்நிலைக்கும் பயன்ப்படுத்தும் வண்ணம் மிகவும் உயர்ந்த முறையான மற்றும் வளர்ந்த செய்முறைகளையும், நடைமுறைகளையும் எட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

> **“மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்**
> **சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி**
> **நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்”**

மீனினைப் பிடிக்க நீரில்இறங்கி மீனைப் பிடித்து நீருக்கு வெளியே வரும் சிரல்பறவைப் போல போர்களத்தில் வாளாலும் அம்புகளாலும் விழுப்புண் பெற்ற போர்வீரனின் பிளந்த தசையைத் தைக்கும் போது நெடிய வெள்ளூசியானது காயத்தினுள் புகுந்து வெளியே வருகிறது என்று இப்பாடல் கூறுவதன்வழிகாயங்களைத்தைக்கும்முறை அன்றே நம்மிடமிருந்தது என்பது இப்புறப் பாடலால் தெளிவாகிறது. மேலும் போர்களத்தில்

காயம்பட்டோர்க்குப் பஞ்சினைக் கொண்டு மருத்துவம் செய்துள்ளனர் என்று வரும் மற்றோரு புறப்பாடல்அதற்கெடார்சான்று.

**"கதுவாய் போகியது திவாய் எஃகமொடு பஞ்சியும்களையாய் புண்ணர்"**

அறுவை மருத்துவம் பற்றிய செய்திகளை பிற்கால பக்தி இலக்கிய நூல்களும் அதற்குப் பிந்தைய கம்பராமாயணமும் கொண்டுள்ளது.

**"வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மானாதகாதல் நோயாளன் போல்"**

மேலும் நம்மிட அகத்தியர் ரணவைத்தியம், அகத்தியர் ரணபெருநூல், சித்தர் அறுவை வைத்தியம் முதலிய அறுவை மருத்துவம் சார்ந்த நூல்களும் இருந்தன.

**மருத்துவரின் பண்பும் மருத்துவத்தின் மாண்பும்**

**"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று அப்பால் நாற் கூற்றே மருந்து"**

மருத்துவம் என்பது நான்கு கூறுகளை உடையது என்று வள்ளுவர் உரைக்கிறார். அவை நோயுற்றவர், அந்நோயை தீர்ப்பவராகிய மருத்துவர், அம்மருத்துவருக்கு மருந்து செய்ய உழைக்கும் உதவியாளர், மற்றும் மருந்து எனத் தெளிவான வரையறையை வகுத்துள்ளார். ஆயினும் இந்நான்கு கூறுகளும் அதனுள் தனித்தனியாக நான்கு கூறுகளை உடையது என்றும் கலாநிதி. இ. பாலசுந்தரம் "தனது இலக்கியத்தில் மருத்துவக்கருத்துகள்" என்னும் நூலில் வள்ளுவன் கூறியதை விளக்கியுள்ளார்.

மேலும் தன் நூலின் வழியே, ஆயுர்(ள்) வேத நூல்களில் மிகவும் பழமை வாய்ந்த நூல்களில் ஒன்றான "சரகசங்ஹிதை" யை தழுவி வெளிவந்த "அஷ்டாங்க ஹிருதயம்" என்னும் நூலில் மருத்துவத்திற்குத் தேவையான நான்கு கூறுகளை "சதுர்பாத நீயம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளவை அவை: 1. வைதியன் (மருந்துவன்) 2. அவுஷதன் (மருந்து) 3. பரிசாரகன் (தீர்ப்பான்) 4. ரோகி (உற்றவன் -நோயாளி) என அப்படியே வள்ளுவனைப் பின்பற்றியவையே என்று சான்றோடு நிறுவியுள்ளார்.

பிணியுற்றவரின் நோய் ஆய்ந்து, நோயுற்றவரின் விருப்பத்திற்குக் கொடுக்காது, அந்நோய்க்கு பொருந்துமாறும் நோய் தீர்க்குமாறு மருந்தாய்ந்து கொடுக்கும் பண்புடைய மருத்துவரை அறவோன் என்று தமிழர் போற்றி வந்துள்ளனர், இதனை நற்றிணை பாடல் வழி அறியலாம்.

**"அரும் பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல"**

மருத்துவர்களைத் தமிழர்கள் அறவோர் என்று போற்ற பெருங்காரணம் உண்டு, அக்காலத்தில் தமிழரின் அறம் பற்றி வளர்ந்தவர்கள் அம்மருத்துவர்கள், பிறர் நோயை கூடத் தனக்கேற்பட்ட நோயாகக் கருதி மருந்தளிப்பதே அறமாகக் கருதியிருந்தோரை அறவோராகப் போற்றுவது தானே அறம்,

**"பிறர் நோயும் தம் நோய் போல் போற்றி,
அறன் அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்"**

அதே போல் பிறரின் நோய் தீர்க்கும் மருந்தறிந்தும், அம்மருத்தறிவை மறைப்பது கொடுஞ்செயலாக, அறம்மற்றதாகக் கருதப்பட்டது என்பதைக் கலித்தொகையின் வழி அறிய முடிகிறது,

**"வருந்திய செல்லல் தீர்த்த திறன் அறி ஒருவன் மருந்து அறைகோடலின் கொடிதே"**

கருச்சிதைவினை செயற்கையாகச் செய்தோர்க்கு பாவத்தினை போக்கும் வழி அறவேயில்லை என்று பழந்தமிழ் சான்றோர் பழிக்கின்றனர்,

**"மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**.....உய்தி இல் 'என'**
**அறம் பாடின்றே ஆயிழை கணவ!"**

நோய் தீர்க்கும் தன்மைக்கொண்ட மரத்தினை மருந்துசெய்யும் பொருட்டு கூடக் கொள்ளக்கூடாது என்பது தமிழர் அறம். அவ்வாறு செய்வது பிறர்க்கு மருந்து கிடைக்காது என்பதற்காக மட்டுமல்ல மருந்து செய்யுங்கால் அம்மர இனத்தினை அழித்துவிடக்கூடாது என்பதிற்காவும்தான், இதனை

**"மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்"** என்னும் நற்றிணை வழியறியலாம்.

இப்படியெல்லாம் தனக்கேன உரிய தனித்துவமான மெய்யியல்களையும், அறங்களையும் கொண்டத் தமிழர் மருந்துவம் எவ்வாறு வரலாற்றின் பக்கங்களை விட்டுமறைந்தது, மக்களின் மரபிலிருந்து இன்று இது விலகிநிற்க காரணம் என்னவென்பது என் அறிவிற்கு எட்டாத மர்மமேயாயினும் இன்று இத்தனை வளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது தெரிந்தும் தமிழர் மருந்துவமானது மீண்டெழாமல் இருக்க காரணமும் மர்மம் தான். தமிழ் மொழியை போல, தமிழர் வரலாற்றை போல வன்மத் தோடும் வஞ்சத் தோடும் வீழ்த்தப்பட்டது தமிழர் மருத்துவம். அழிக்கப்பட்டும், வன்முறையால் ஒடுக்கப்பட்டும் கூட இத்தகைய தனித்தன்மையோடு தமிழ் போல நிலைக்கிறது என்பது வியப்பு தான் ஆனால் அதற்கு காரணமும் உண்டு, அது தமிழர் அறிவுப் பள்ளியில் கருக்கொண்ட தாயிற்றே அதற்கே உரித்தான வலிமையில்லாமலா போகும்.

## அடிக் குறிப்புகள்

1. கலாநிதி இ.பாலசுந்தரம், இலக்கியத்தில் மருத்துவக் கருத்துகள், 1990. ப-1.
2. சிலப்பதிகாரம் வரி. 443-444.
3. தொல்காப்பியம், நூற்பா. 1447.
4. சிலப்பதிகாரம், நாடுகாண் காதை 182- 183.
5. https://www.tamilheritage.org/manulogy/siddha/siddha.html.
6. திருக்குறள் 734.
7. திருக்குறள் 738.
8. திருக்குறள் 941.
9. கலாநிதி இ.பாலசுந்தரம், இலக்கியத்தில் மருத்துவக் கருத்துகள், 1990. ப-4.
10. திருக்குறள் 948.
11. திருக்குறள் 949.
12. திருமந்திரம் 800.
13. பதிற்றுப்பத்து பாடல்-42, வரி2-4.
14. புறநானூறு 353; 15-16.
15. குலசேகர ஆழ்வார், பெருமாள் திருமொழி பாடல்.4,வரி 1-2.
16. திருக்குறள்950.
17. நற்றிணை 136.
18. நற்றிணை 136.
19. கலித்தொகை. 129 வரி. 24-25.
20. புறநானூறு பாடல் 34, வரி 2-7.